**வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

FWC

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, நவம்பர் - 2017
## Term Examination, November - 2017

| கிறிஸ்தவ நாகரிகம் I | தரம் :- 13 (2018) | நேரம் :- 2.00 மணித்தியாலம் |
|---|---|---|

### பகுதி I

❖ **மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தை விடைத்தாளில் (X) புள்ளடி இடுவதன் மூலம் காட்டுக.**

01. யூதர்களின் கலாசார விழாவான அறுவடையின் விழா திருச்சபையின் பிறந்ததினமாக புதிய வடிவெடுத்தது. எனவே அறுவடையின் விழாவாக கருதப்பட்டது.
    1) பாஸ்கா விழா  2) கூடார விழா  3) பெந்தக்கோஸ்தே விழா
    4) பாவப்பரிகார விழா  5) கோவில் அர்ப்பண விழா

02. சீடர்கள் “கிறிஸ்தவர்” என்ற பெயரைப் பெற்ற இடம்
    1) சமாரியா  2) அந்தியோக்கியா  3) எருசலேம்
    4) யூதேயா  5) உரோம்

03. புற இனத்தவரின் இறைவாக்கினராக கருதப்படுபவர்
    1) பவுல்  2) திருமுழுக்கு யோவான்  3) பர்னபா  4) எசாயா  5) ஓசே

04. தூய பவுலின் 1ம் மறைத்தூதுப் பயணம் பற்றிய நிகழ்வுகளில் சரியானது
    A. சைப்பிரஸ் தீவில் ஆளுநர் சேர்ஜியுஸ் பவுலுஸ் நற்செய்தியை ஏற்றல்.
    B. சீலாவுடன் பயணத்தை தொடருதல்
    C. தெமத்திரியு பொற்கொல்லர்களின் தலைவனால் இடம் பெற்ற கலவரம்
    D. பயணத் தோழர்களாக பர்னபா, யோவான் மாற்கு சென்றமை.
    1) A  2) BC  3) AD  4) B  5) AD

05. அந்தியோக்கு ஆயர் இஞ்ஞாசியார் கொல்லப்பட்ட கலாபனை
    1) 1ம் கலாபனை  2) 3ம் கலாபனை  3) 6ம் கலாபனை
    4) 8ம் கலாபனை  5) 10ம் கலாபனை

06. “வார்த்தை ஒரே பொருளானவர் அவர் மெய்யான கடவுளாக இருக்கிறார்” என்ற கூற்றுடன் தொடர்புபட்ட சங்கம்
    1) நிசெயா சங்கம்  2) எபேசு சங்கம்  3) கல்சடோன் சங்கம்
    4) கொல்எஸ்தாந்து நோபிள்சங்கம்  5) திரிதெந்தீன் சங்கம்

07. கி.பி 496ல் பேராயர் றெமிஜியுஸ் ஆண்டகையால் திருமுழுக்குப் பெற்ற அரசன்
    1) ஹேக்கன்  2) ஏரால்ட்  3) ஒலப் திரிக்வாசன்
    4) குளோவிஸ்  5) லெயிப் எறிக்கன்

08. திரிதெந்தீன் பொதுச்சங்கம் கூட்டப்படுவதற்கு காரணமான திருத்தந்தை
    1) 3ம் பவுல்  2) 5ம் பவுல்  3) 10ம் சிங்கராயர்
    4) 5ம் சிக்துஸ்  5) 5ம் லியோ

09. பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடும் மையமாகக் கொண்டிருக்கும் பிரதேசம்
1) பலஸ்தீனா 2) எகிப்து 3) காசா
4) மொசப்பெத்தேமியா 5) உரோம்

10. கிரேக்கத்திலே இறைவனின் கதவாக கருதப்பட்டது.
1) அசீரியா 2) எகிப்து 3) கானான் 4) பெலிஸ்தீயா 5) பபிலோனியா

11. கைக்கோசரின் ஆட்சியை முறியடித்து புதிய எகிப்திய பேரரசை நிறுவிய மன்னன்
1) பார்வோன் 2) 3ம் தோத்மாசு 3) 4ம் ஆமன் கோட்டபு
4) 2ம் இராம்சேஸ் 5) இராம்சேஸ்

12. மன்னன் சாலமோனின் ஆட்சிச் சிறப்புகளில் பொருத்தமற்றது
1) உள்நாட்டுக் கொள்கைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து நீதி, நிர்வாகம் சிறப்பாக இடம் பெற்றது.
2) பல படைத்தளபதிகள், குருக்கள் நியமிக்கப்பட்டனர்.
3) எதிரிகளின் ஊடுருவலைத் தவிர்ப்பதற்காக படைப்பலத்தை அதிகரித்தார்.
4) சமூக, பொருளாதார, கலை கலாசாரத்தில் நாட்டை உருவாக்குவதில் செயற்பட்டார்.
5) நாட்டை 12 மாவட்டங்களாக பிரித்து ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒவ்வொரு ஆளுநரை ஏற்படுத்தினார்.

13. பலஸ்தீனா வட அரசு, தென்னரசு என பிளவுபட்ட ஆண்டு
1) கி.மு 722 2) கி.மு 800 3) கி.மு 922 4) கி.மு 796 5) கி.மு 539

14. யூதர்கள் மேசை மீது சாய்ந்து உண்ணும் பழக்கத்தினைக் கற்றுக்கொண்டது
1) உரோமரிடம் 2) எகிப்தியரிடம் 3) அசீரியரிடம்
4) கிரேக்கரிடம் 5) கானனியரிடம்

15. “நற்கருணை விருந்து இயேசுவின் தியாகப் பலியின் ஓர் அடையாளம் மட்டுமே” என்ற சிந்தனையை கொண்டிருந்த சீர்திருத்தவாதி
1) மாட்டீன்லூதர் 2) தோமஸ்முன்கர் 3) யோன் கல்வின்
4) உல்றிச் சுவிங்கிளி 5) வில்லியம் கேரி

16. எட்டாம் ஹென்றி தன்னை ஆங்கிலத் திருச்சபையின் தலைவராகப் பிரகடனம் செய்த ஆண்டு
1) கி.பி 1553 2) கி.பி 1540 3) கி.பி 1535
4) கி.பி 1729 5) கி.பி 1536

17. புனித இக்னேசியஸ் லொயலா
1) இவர் பிரான்சில் வீடுவீடாகச் சென்று மறைக்கல்வியை போதிக்கத் தொடங்கினார்.
2) ஜெனிவாவில் கல்வின் பிரிவினைவாதிகளை மனம் மாற்றினார்.
3) அரசியல் தலைவர்களுக்கு ஆன்மீக குருவாகவும் விரிவுரையாளராகவும் சேவையாற்றினார்.
4) கத்தோலிக்க திருச்சபையை உள்ளார்ந்த ரீதியில் சீர்திருத்தி பிரிந்து சென்ற கத்தோலிக்கர்களை மீளவும் திருச்சபையில் இணைத்தார்.
5) தெய்வீக அன்பின் கழகம் என்ற சபையை ஆரம்பித்தார்.

18. அமெரிக்காவிலே முதன் முதலில் குருக்களைப் பயிற்றுவிப்பதற்காக குருமடங்களை அமைத்தவர்.
1) புனித தூரிபியுஸ் 2) புனித பிலிப்நேரி 3) புனித பீற்றர் கனிசியஸ்
4) புனித சார்லஸ் பொரோமியோ 5) புனித பிரான்சிஸ் சவேரியார்

19. சிலுவையில் அறையுண்ட கிறிஸ்துவை நெருங்கிப் பின் பற்றி இறைவனின் உன்னத மகிமைக்காக பணியாற்றுவதை நோக்காக கொண்ட சபை
1) கப்புச்சின் சபை 2) கார்மேல் சபை 3) இயேசு சபை
4) டொமினிக்கன் சபை 5) பிரான்சிஸ்கன் சபை

20. மத்தேயு ரிச்சி அடிகளாரின் மறைத்தூதுப் பணியின் முக்கிய அம்சமாக கருதப்பட முடியாதது
   1) இவர் பிரான்சிஸ்கன் சபையைச் சேர்ந்தவர்
   2) தேசிய பண்பாட்டை மதித்து பணிபுரிந்தார்
   3) வானியல் தொடர்பான மேடைப் பேச்சுக்களை நிகழ்த்தி மக்களின் புகழ் பெற்றார்.
   4) "போல் நுசு" என்ற அரச உத்தியோகத்தர் இவரிடம் திருமுழுக்கு பெற்றவர்
   5) கி.பி 1610ல் இறைவனடி சேர்ந்தார்.

21. சீனக் குருக்களுக்கு தமது சொந்த மொழியில் வழிபாடுகளை மேற்கொள்ள அனுமதியளித்த திருத்தந்தை.
   1) 3 வது பவுல் 2) 5ம் லியோ 3) 13ம் கிறகோரியார்
   4) 5ம் சிக்துஸ் 5) 5ம் பவுல்

22. "நியுயோர்க் கிரிசுவோ தொஸ்வாயி" என்ற ஆலயம் நிறுவப்பட்டது
   1) பிலிப்பைன்சில் 2) பிரான்சில் 3) சீனாவில்
   4) யப்பானில் 5) கொரியாவில்

23. அரசியலில் பிலிப்பைன் திருச்சபை முக்கிய இடம் வகிப்பதற்கான காரணம்
   1) மறைபரப்பும் பணியில் பல துறவறசபைகளை இணைத்து புதிய முறைகளில் செயற்படல்
   2) அநீதி, ஊழல் நிறைந்த தலைவர்களுக்கெதிராக உரத்த குரல் எழுப்புதல்
   3) தஞ்சம் கோரி வரும் புகலிடக்கோரிக்கையாளருக்கு நேசக் கரம் நீட்டல்
   4) ஆரியாவின் அறிவுமையமாக மணிலா விளங்குதல்
   5) ஸ்பெயின் நாட்டு சமய கலாச்சாரத் தாக்கத்தினை கொண்டிருப்பதால்

24. இந்திய கத்தோலிக்க திருச்சபையின் உத்தியோகபூர்வ அமைப்பாக சென்னையில் உருவாக்கப்பட்டது
   1) இலத்தீன் திருச்சபை 2) இந்திய கத்தோலிக்க ஆயர் மன்றம்
   3) சிரிய மலார் திருச்சபை 4) மார்தோமா திருச்சபை 5) சைதீக சீரிய திருச்சபை

25. "கிறிஸ்துவைப் பின்பற்றுவோர்" என்ற துறவறசபையை ஆரம்பித்தவர்
   1) அருட்தந்தை ஜீவர்கீஸ் 2) ஜோன் வெஸ்லி அடிகள் 3) அருட்தந்தை நிக்லஸ் ஆப்ரி
   4) ஐசக் பேக்ஸ் அடிகள் 5) மத்தேயு ரிச்சி அடிகள்

26. இந்தியாவில் இலத்தின் திருச்சபைக்கான கத்தோலிக்க ஆயர் மன்றம் உருவாக்கப்பட காரணமான திருத்தந்தை
   1) புனித 2ம் அருளப்பர் சின்னப்பர் 2) புனித 23ம் அருளப்பர்
   3) 15ம் பெனடிக்ட் 4) 16ம் பெனடிக்ட் 5) 6ம் பவுல்

27. காசியப்பன், மொல்கல்லான என்ற அரசன்களின் காலத்தில் கிறிஸ்தவ படைவீரர்கள் இலங்கையில் இருந்தனர் என்பதற்கான ஆதாரத்தை வெளியிட்டவர்
   1) பேராசிரியர் செனரத் பரனவிதாரண 2) பெஞ்சமின் ரபாய்
   3) வஜுபோடி 4) இவ்வஹாப் 5) கொஸ்மஸ் இன்டோப்லேடஸ்

28. பல வீரர்கள் தொற்றுநோயினால் மடிந்த சிலுவை போர்
   1) 5ம் சிலுவை போர் 2) 6ம் சிலுவைப் போர் 3) 8ம் சிலுவை போர்
   4) 2ம் சிலுவைப் போர் 5) 4ம் சிலுவை போர்

29. பின்வரும் கூற்றுக்களைக் கருதுக
   A. ஆயராகத் திரு நிலைப்படுத்தப்பட்டு திருத்தந்தையின் தூதுவராகப் பணிபுரிந்தார்.
   B. சுதேச குருக்களின் உருவாக்கத்திற்கு வித்திட்டவர்.
   C. இவர் பேரு நாட்டின் மக்களுக்கு திருமுழுக்கும், உறுதிப் பூசுதலும் கொடுத்தார்.
   D. இவரது மறைப் பணியின் மூலம் சுவீடன் நாட்டு மக்கள் கிறிஸ்தவத்தை தழுவினர்.
   மேற்படி கூற்றுக்களில் புனித ஆன்ஸ்கா பற்றிய கூற்று / கூற்றுக்கள்
   1) A 2) AC 3) BD 4) C 5) AD

30. ஆச்சிரம வாழ்க்கையை சிறப்புற மேற்கொள்ள உழைத்தவர்களுள் பொருத்தமற்றவர்
1) தேப்ஸ் சின்னப்பர் 2) புனித அத்தனாசியார் 3) புனித அகுஸ்தீன்
4) புனித மாட்டீன் 5) புனித ஆசீர்வாதப்பர்

31. புனித வின்சென்ட் தே பவுலால் ஆரம்பிக்கப்பட்ட சபை
1) கப்புச்சின்சபை 2) கார்மேல் சபை 3) மறைபோதக சபை
4) இயேசு சபை 5) சுவாமிநாதர் சபை

32. போர்த்துக் கேயருக்கு இலங்கை அரசியலில் உட்புகுவதற்கு உதவியளித்த மன்னன்
1) 9ம் பராக்கிரமபாகு 2) விக்கிரமபாகு 3) 2ம் விமலதர்மசூரியன்
4) பரராஜ சேகரன் 5) 7ம் புவனேகபாகு

33. கி.பி 1692ல் புனித யோசேவாஸ் அடிகளுடன் தொடர்புடைய சம்பவமாக கருதப்படுவது
1) சைசூரி என்ற தொற்று நோயினால் பாதிக்கப்பட்டவர்களைத் தேடிச் சென்று பணியாற்றுதல்
2) இரண்டாம் விமலதர்ம சூரியனால் ஒற்றர் என்ற சந்தேகத்தில் கண்டியில் கைது செய்தல்
3) இந்தியாவின் கோவையிலிருந்து மாறுவேடத்துடன் இலங்கை வருகை
4) தெதுறு ஓயாவை கால் நடையாக கடந்து சென்றமை
5) இவ்வுலகை விட்டு நீங்கி இறைபாதமடைதல்

34. ஆயர் லக்தாஸ் டிமெல் பற்றிய சரியான கூற்று
1) இவர் பப்ரிஸ்ட் மறைத்தூதுக் குழுவைச் சேர்ந்தவர்
2) இலண்டன் மறைத்தூதுக் குழுவின் இலங்கையின் முதல் ஆயர்
3) மெதடிஸ்ட் குழுவின் இலங்கை வருகைக்கு தலைமை தாங்குதல்
4) திருச்சபை மறைத்தூதுப் பணிச் சங்கத்தின் ஸ்தாபகர்
5) இவர் இரட்சணிய சேனை எனும் மறைத்தூதுக் குழுவின் தலைவர் ஆவார்.

35. ஆங்கிலேயர் காலத்தில் உள்நாட்டுக் குருக்களைப் பயிற்றுவிப்பதற்காக குருமடம் ஸ்தாபிக்கப்பட்டது
1) 1847 2) 1850 3) 1883 4) 1834 5) 1910

36. வதிவிட, ஆரம்ப, உயர்தர, கிராம, மத்திய, பெண்களுக்கென்று வெவ்வேறான பாடசாலைகளை ஆரம்பித்த மறைத்தூதுக் குழு
1) இலண்டன் மறைத்தூதுக் குழு 2) இரட்சணிய சேனை
3) திருச்சபை மறைத்தூதுப்பணி சங்கம் 4) அமெரிக்கன் மறைத்தூதுக் குழு
5) வெஸ்லியன் மறைத்தூதுக் குழு

37. வட அரசினை ஆட்சி செய்த அரசர்களாக கருதப்படுவோர்
1) சிம்ரி, அபியா, ஊசியா 2) ஏலா, ஓம்ரி, ஆகாப் 3) ஏலா, அபியா, ஆகாப்
4) சிம்ரி, ஆக்காசு, ஏலா 5) ஓம்ரி, ஆக்காசு, அபியா

38. தனது சூழ்ச்சியாலும், வஞ்சகத்தாலும் உரோமைப் பேரரசிடமிருந்து படிப்படியாக பலஸ்தீனாவை கைப்பற்றி தனது ஆட்சிக்குள் கொண்டு வந்தவர்
1) பெரிய ஏரோது 2) ஜீலியஸ் சீசர் 3) 2ம் அந்திபர்
4) ஹிர்கானூஸ் 5) மார்க் அந்தோனி

39. செனத்திரின் சங்கத்தின் உறுப்பினர் எண்ணிக்கை
1) 40 2) 72 3) 71 4) 120 5) 70

40. “ஆரால்” எனப்படுவது
1) யூதர்களின் வீட்டு அமைப்பு முறை 2) யூதர்களின் மண ஒப்பந்தம்
3) யூதர்களின் அளவீட்டு முறை 4) யூதர்களின் பயன்பாட்டு மொழிகளில் ஒன்று
5) யூதர்களின் சமயச் சடங்கு

41. “சபாத்” என்ற எபிரேயச் சொல்லின் அர்த்தம் அல்லாதது
1) ஓய்வு 2) நிறுத்துவது 3) பின்பற்றுவது 4) முடிப்பது 5) தவிர்ப்பது

42. கிறிஸ்துவின் "தலைமைத்துவம்" பற்றிக் கூறும் விவிலியப் பகுதி எது?
1) கொலோசயர் 2) கொரிந்தியர் 3) தெசலோனிக்கர்
4) உரோமையர் 5) கலாத்தியர்

43. நற்கருணைக் கொண்டாட்டம் தினமும் கொண்டாடப்பட்டு வந்தது
1) 1ம் நூற்றாண்டிலிருந்து 2) 3ம் நூற்றாண்டிலிருந்து 3) 5ம் நூற்றாண்டிலிருந்து
4) 4ம் நூற்றாண்டிலிருந்து 5) 10ம் நூற்றாண்டிலிருந்து

44. மறைக்கொள்கைகள் மறை உரைகள் ஆன்மீகம் என்பவற்றினை வலியுறுத்தி அப்போஸ்தலிக்கப் பணியாற்ற ஆரம்பிக்கப்பட்ட முதல் துறவறசபை?
1) ஆசீர்வாதப்பர் சபை 2) இயேசு சபை 3) டொமினிக்கன் சபை
4) சிஸ்ரேஷியன் சபை 5) பிரான்சிஸ்கன் சபை

45. பின்வரும் கூற்றுக்களைக் கருதுக
A. ஒழுக்கம் மற்றும் ஒழுங்கு விதிகளை கடினமாக கடைப்பிடித்தமை
B. செபத்தையும், வேலையையும் தமது விருதுவாக்காகக கொண்டிருந்தமை
C. தரவேறுபாடு காட்டாது அனைவரும் சமம் என்ற கருத்து நிலவி வந்தது.
D. திருத்தந்தைக்கு மறை தொடர்பான அறிவுரைகள் வழங்கி வந்தமை
E. ஐரோப்பாவில் தொழில்நுட்பம் பரவ உந்து சக்தியாகச் செயற்பட்டமை
இவற்றுள் ஆசீர்வாதப்பர் சபை பற்றிய சரியான கூற்றுக்கள்
1) ACE 2) BCD 3) ACD 4) CDE 5) ABC

46. உடலின் உயிர்ப்பு பற்றிய பவுலின் படிப்பினைகளில் இறக்கும் போதுள்ள உடல் உயிர்த்தெழும் போதுள்ள இயல்புகளில் சரியானது
1) அழிவுக்குரிய உடல் - அழியாத உடல்
2) வலுவற்ற உடல் - மாண்புக்குரிய உடல்
3) மதிப்பற்ற உடல் - ஆவிக்குரிய உடல்
4) மண்ணால் ஆன உடல் - விண்ணிலிருந்து வந்தவனின் உடல்
5) மனித இயல்பு கொண்ட உடல் - வல்லமையுள்ள உடல்

47. பொன்விதியாகக் கருதப்படுவது
1) கிறிஸ்தவர்கள் மண்ணுலகிற்கு உப்பாக, ஒளியாக இருக்க வேண்டும்.
2) உன்னைப் போல உன் அயலானையும் அன்பு செய்ய வேண்டும்.
3) தமது ஆன்மாவை மீட்பதை விட அடுத்தவரின் ஆன்மாவை மீட்பதே மேலானது
4) மனித ஆன்மா என்பது இறைவனிடமிருந்து வந்தது எனவே எல்லா நிகழ்வுகளும் "விதி" என்பதால் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.
5) பிறர் உங்களுக்குச் செய்யவேண்டும் என விரும்புபவற்றை எல்லாம் நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்

48. விருத்த சேதனம் பெற்றபோது கிறிஸ்துவுக்கு வழங்கப்பட்ட பெயர்
1) மெசியா 2) இயேசு 3) தாவீதின் மகன் 4) போதகர் 5) இறைமகன்

49. திருத்தூதர் காலத்தின் பின்பு திருமுழுக்கு வழங்கப்பட்டது எப்போது
1) பாஸ்கா ஞாயிறு 2) புனித வெள்ளி 3) புனித சனி
4) பாஸ்கா ஞாயிறுக்கு அடுத்து வரும் சனி 5) பெந்தக்கோஸ்தே நாள்

50. திருச்சபையின் மிகப் பழமையான நூலும் திருச்சபையின் உண்மைகளை நிரூபிக்கும் சான்றாக நிகழ்வது
1) டிடாக்கே 2) ஹேர்மஸ் ஆயன் 3) புனித சாந்தப்பரின் கடிதம்
4) அடிப்படைகள் 5) அப்போலொஜியா

(50X2=100 புள்ளிகள்)

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

FWC

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, நவம்பர் - 2017
## Term Examination, November - 2017

| கிறிஸ்தவ நாகரிகம் II | தரம் :- 13 (2018) | நேரம் :- 3.00 மணித்தியாலம் |
|---|---|---|

### பகுதி I

❖ பகுதி "I" இலிருந்து 2 வினாக்களையும் பகுதி "II" இலிருந்து 3 வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக 5 வினாக்களுக்கு விடை தருக.

*01.*

1) மொசபத்தேமியா நாகரிகத்தின் சிறப்பம்சங்கள் 4 தருக?

2) பெந்தக்கோஸ்தே நாளில் நடந்தேறிய நிகழ்வுகள் 4 தருக?

3) திருச்சபையின் போதனைக்கு எதிராக தோன்றிய பேதகங்கள் நான்கினை குறிப்பிட்டு அவற்றின் போதனைகள் ஒன்று வீதம் எழுதுக?

4) தொடக்க கால கிறிஸ்தவர்களின் ஆன்மிக வாழ்வை ஆதாரப்படுத்தும் சான்றுகள் நான்கினை குறிப்பிடுக ?

5) தொடக்ககால கிறிஸ்தவர்களின் முக்கியமான சமூகப் பண்புகள் இரண்டை குறிப்பிட்டு அவை இன்றைய கிறிஸ்தவ சமூகத்தில் எவ்வாறு கடைப்பிடிக்கப்படுகின்றன என்பதை எடுத்துக்காட்டுகளுடன் தருக?

(20 புள்ளிகள்)

*02.*

1) யூத சமூகத்தில் இயேசுவின் காலத்தில் தாழ்த்தப்பட்டவர்களாக கருதப்பட்டவர்களில் நான்கு பிரிவினரை குறிப்பிடுக?

2) பலஸ்தீனாவில் ஏரோதன் மன்னரின் ஆட்சி முறையில் காணப்பட்ட சமூக அபிவிருத்திகள் 4 தருக?

3) இஸ்ரேயல் அரசின் தென்னரசில் காணப்பட்ட சிறப்பம்சங்கள் 4 தருக?

4) மத்திய யுகத்தில் திருச்சபை முக்கியத்துவம் அளித்து நிறைவேற்றிய இலௌகீக தேவைகள் 4 குறிப்பிடுக?

1.

5) எமது நாட்டிலே இன்று இனங்களிடையே சமயங்களுக்கிடையே நிலவி வரும் முரண்பாடுகளுக்கு மத்தியில் தீர்வுகாண திருச்சபை எவ்வாறு செயற்படுகிறது. எவ்வாறு செயற்படலாம் என நான்கு கருத்துகளில் எழுதுக?.

(20 புள்ளிகள்)

*03.*

1) துறவற வாழ்வின் வளர்ச்சி படிநிலைகள் நான்கு தருக?

2) ஆசீர்வாதப்பர் சபையினர் ஆற்றிய பிறநலப் பணிகள் நான்கு தருக?

3) இயேசு சபையினர் திருச்சபையின் மேம்பாட்டிற்காக ஆற்றிய பங்களிப்புகள் நான்கு தருக?

4) சீர்திருத்தவாதியான தோமஸ் முன்ற்சர் மதவாழ்வில் மட்டுமல்லாது சமூக அரசியல் வாழ்வில் ஏற்படுத்திய சீர்திருத்த முயற்சிகள் நான்கு குறிப்பிடுக?

5) புனித பிரான்சிஸ் அசிசியின் வாழ்விலிருந்து இன்றைய இளையோர் கற்றுக்கொள்ளக்கூடிய படிப்பினைகள் நான்கு எழுதுக?

(20 புள்ளிகள்)

## பகுதி II

*04.*

1) உரோமைய நாகரிகம் கிறிஸ்தவ நாகரிகத்தில் ஏற்படுத்திய செல்வாக்கினை விளக்குக?

2) சாலமோன் அரசனின் ஆட்சியின் சிறப்பம்சங்களை விபரிக்குக?

3) திருச்சபையின் தொடக்கநிலை பற்றியும் அதன் வாழ்க்கை வளர்ச்சி பற்றியும் டிடாக்கே எனும் நூலில் உள்ளவற்றினை விளக்குக?

4) மனித சமூகத்தின் மேம்பாட்டிற்கு கிரேக்க நாகரிகம் எத்தகைய பங்களிப்புக்களைச் செய்தது என்பதை ஆராய்க?

(20 புள்ளிகள்)

*05.*

1) திருவிவிலியத்தின் பிரதான இரு மொழி பெயர்ப்புக்களையும் விளக்குக?

2) அலெக்சாந்தியா இறையியல் கல்லூரியின் சிறப்பம்சங்களை விபரிக்குக?

3) ஒல்லாந்தரின் மறைபரப்பாளராகச் செயற்பட்ட "பிலிப்ஸ் பல்தேயுஸ்" அடிகளாரின் பணிகளை சுருக்கமாக விளக்குக?

4) புனித யோசேவாஸ் அடிகள் இலங்கையில் ஆற்றிய புதுமைகளையும் இறை இரக்கப் பணிகளையும் விபரிக்குக?

(20 புள்ளிகள்)

*06.*

1) தூய பவுலின் முதலாவது மறைத்தூதுப் பயணத்தில் இடம் பெற்ற முக்கிய நிகழ்வுகளை விளக்குக?

2) எருசலேம் பொதுச்சங்கம் கூட்டப்பட்டதற்கான பின்னணியை சுருக்கமாக விளக்குக?

3) ஆரம்ப கால கிறிஸ்தவ மறைபரப்பாளர்கள் மறை வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்புக்களை விபரிக்குக?

4) ஐரோப்பிய நாடுகளில் கிறிஸ்தவம் எவ்விதம் படிப்படியாக பரவியது என்பதை சுருக்கமாக விளக்குக?

(20 புள்ளிகள்)

*7.*

1) போர்த்துக்கேயர் காலத்தில் இலங்கைக்கு வருகை தந்த துறவறசபைகளைக் குறிப்பிட்டு அவற்றின் பணிகளை விளக்குக?

2) மறையைப் பரப்புவதில் போர்த்துக்கேய மறைபரப்பாளர்கள் கையாண்ட உத்திகளை எடுத்துக் காட்டுக?

3) ஆங்கிலேயர் காலத்தில் இலங்கைக்கு வருகைதந்த மிஷனறிக்குழுக்களையும் அவை கல்விக்கு வழங்கிய பங்களிப்புக்களையும் விபரிக்குக?

5) இலங்கையில் ஒல்லாந்தரின் சீர்திருத்த சபையானது எவ்வாறு பணியாற்றியது என்பதை விளக்குக?

(20 புள்ளிகள்)

*8)*

1) கிறிஸ்துவின் இரண்டாம் வருகை பற்றிய தூய பவுலின் படிப்பினைகளை விளக்குக?

2) சீனாவில் மறைபோதகப் பணி ஆற்றிய மத்தேயுறிச்சி அடிகளின் பணிகளை விபரிக்குக?

3) இஸ்ராயல் மக்கள் வாழ்வில் தலைமைச் சங்கத்தின் முக்கியத் துவத்தினை விளக்குக?

4) யூதர்களின் மத மரபுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுத்திகரிப்புச் சடங்குகளை எடுத்துக்காட்டுக?

(20 புள்ளிகள்)